# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35 | வ.ஆ. 2007 ஆனி 10 | ஐ. ஆகிர் 24 | (23-6-76) புதன் புத்தகம் 30 | இதழ் 18


## இருட்டறைக்குள் தமிழ் இளைஞர்கள்

வட்டுக்கோட்டை மாநாட்டின்போது பொலிஸ் நடவடிக்கையை அடுத்து கைது செய்யப்பட்ட 11 தமிழ் இளைஞர்களும் இப்போது யாழ் கோட்டை சிறைச்சாலையில் ஓர் இருட்டறைக்குள் வைத்துப் பூட்டப்பட்டிருக்கிறார்களாம். இருட்டறையிலிருந்தாலும், இந்த இளைஞர்கள் உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தனின் பாடல்களை சத்தமிட்டுப் பாடிக்கொண்டு, தளராத உறுதியுடன் இருந்து வருகிறார்கள். இவர்கள் கைதுசெய்யப்பட்டு இன்றுடன் 40 நாட்கள் ஆகின்றன.

# 'தூக்குமேடை ஏறவும் தயார்!'

## சட்டமாணவர் அளித்த வரவேற்பில் நவம் எழுப்பிய எழுச்சி முரசம்!

"எங்கள் நால்வருக்கும் எதிரான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெறும்போது, அந்த வாய்ப்பைப்பயன்படுத்தி தமிழினத்தின் பிரச்சினைகளையும், சுதந்திரக் கோரிக்கையையும் உலகறியச் செய்வோம். விசாரணை முடிவில் எமக்கு எந்தத் தண்டனை வழங்கப்பட்டாலும், தமிழினத்துக்காக அதை மனமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள சித்தமாக இருக்கிறோம். சிறைத்தண்டனையென்றாலும் சரி — சொத்துப் பறிமுதல் என்றாலும் சரி — ஏன் தூக்குத் தண்டனையென்றாலும் சரி — இனத்தின் விடுதலைக்காக இன்முகத்துடன் எதையும் ஏற்றுக்கொள்வோம்."


இவ்வாறு 18-6-76ல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை கையேற்றுக் கொண்டு வெளியேவந்த தமிழ்த் தலைவர்கள் நால்வருக்கும் சட்டக்கல்லூரி தமிழ் மாணவர்கள் அளித்த வரவேற்பின்போது பேசிய திரு. வி. என். நவரத்தினம் உணர்ச்சிபொங்கக் குறிப்பிட்டார்.

இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் நாவலர் அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

"தமிழினத்தின் உரிமைப் போராட்டம் பல்வேறு துறைகளிலும் நடைபெற்று வருகிறது. பாராளுமன்றத்திலும் வெளியிலும் நடந்து வந்த விடுதலைப் போராட்டம், இன்று நீதிமன்றம் வரை நீண்டுவிட்டது தமிழினத்தின் சரித்திரத்தில் இன்றைய எழுத்துக்களை பொன்னெழுத்துக்களினால் பொறிக்கவேண்டும். இன்றையதினம், தமிழினம் பூரணமாக ஒன்றுபட்டுவிட்டதென்பதை அரசாங்கம் நிச்சயம் உணரும். தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் என்ற சதுரங்க விளையாட்டில் நாங்கள் நால்வரும் வெறுமனே காய்களே யாகும். அதன் இறுதி வெற்றி தமிழினத்தின் கரங்களிலேயே தங்கியிருக்கிறது."

திரு மு. சிவசிதம்பரம், திரு. செ; இராசதுரை ஆகியோரும் பேசினர்.

—4-ம் பக்கம் பார்க்க





18-6-76ல் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகையை ஏற்றுக்கொண்ட பின்னர் நீதிமன்றத்தை விட்டு வெளியேறிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் நாவலர் அமிர்தலிங்கம் வ, ந. நவரத்தினம், கா, பொ. இரத்தினம், க, துரைரத்தினம் ஆகியோருக்கு சிறுபான்மைத் தமிழர் தலைவர்களில் ஒருவரான திரு. சுந்தரம் மவர்மாலை சூடி வரவேற்பதை முதல் படத்திலும், நான்கு தலைவர்கள் சார்பிலும் ஆஜரான சட்ட நிபுணர்களின் குழுவின் தலைவர் மூதறிஞர் தந்தை செல்வா நீதிமன்றத்தைவிட்டு வெளியே வருவதையும் இரண்டாவது படத்திலும் காணலாம்,

## பண்டத்தரிப்பில் பொலிசார் அட்டூழியம்

பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களை சங்கானைப் பொலிசார் தேவையில்லாமல் பயமுறுத்துவதும் விரட்டுவதுமாக இருந்துவருகிறார்களாம். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்கு அருகிலுள்ள கடை

—4-ம் பக்கம் பார்க்க

# 'புஷ்பராணியை நிர்வாணமாக்கி பொலிசார் தாக்கினர்!'

## தேசிய பேரவையில் தர்மர் கண்டனம்!

மானமே பெரிதென்று வாழும் தமிழ்ப்பெண்ணினத்தை பொலிசார் எவ்வளவு கேவலமாகவும் மனிதாபிமானமற்ற முறையிலும் — காட்டுமிராண்டித் தனமாக யாழ்ப்பாணத்தில் நடத்தி வருகிறார்கள் என்ற உண்மையை தேசிய அரசுப் பேரவையில் பேசிய உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம் அம்பலப்படுத்தினார். யாழ்ப்பாணத்தில் பொலிசார் தமிழ் பெண்ணொருத்தி மீது நடந்து கொண்ட கழிசடைத்தனம் அதிர்ச்சி தருவதாகவும் வெட்கக்கேடாகவும் அமைந்துள்ளது எனவும் திரு. தருமலிங்கம் சுட்டிக்காட்டினார்.

18-6-76ல் ஒத்திவைப்புப் பிரேரணை மீது அவர் பேசியதாவது!-

"மயிலிட்டியைச் சேர்ந்த புஷ்பராணியென்ற இளம் பெண்ணைத்தேடி பொலிசார் அவளது வீட்டிற்கு யூன் 7ம் திகதி சென்றிருக்கின்றனர். அங்கு அவள் இல்லாததால், பொலிசார் அப்பெண்ணின் சகோதரனையும் சகோதரியையும் பணயக் கைதிகளாகப் பிடித்துச்சென்றனர். எந்தச் சட்டத்தின் கீழ் பொலிசார் இப்படி நடந்துகொண்டார்கள் என்பதை அறியவிரும்புகிறேன். இவர்களைப் பிடித்துச்சென்ற பொலிசார், புஷ்பராணி பொலிஸ் நிலயத்துக்கு வருமட்டும், இவர்களை விடுதலை செய்யமுடியாது என்று கூறிவிட்டனர். இவ்வளவு திமிரான முறையில் வேறு எந்த நாட்டிலாவது பொலிசார் இவ்வாறு நடந்திருக்கிறார்களா என்று கேட்கவிரும்புகிறேன்.

"இதையடுத்துபுஷ்பராணி யூன் 9ம் திகதி பொலிஸ் நிலை

—4-ம் பக்கம் பார்க்க



## இராசன் பேசிய கூட்டத்தில் தீ!

மட்டக்களப்பு அரசியல் அதிகாரி இராசன் செல்வநாயகம் பேசிய கூட்டத்தில் தீ பிடித்தது. இதனால் இராசனும் அவரது கையாட்களும் அதிர்ந்து வேர்த்து விறுவிறுத்துப் போனார்கள். இச்சம்பவம் அண்மையில் சித்தாண்டியில் நடைபெற்றது.

திரு. இராசன் செல்வநாயகத்துக்கு சித்தாண்டியில் அவரது எடுபிடிகள் ஒரு வரவேற்பை அளிக்கவிருந்தனர். இதை எதிர்த்து சித்தாண்டிப் பகுதியில் வாழும் மானமுள்ள தமிழ் இளைஞர்களும் மற்றையோரும் கறுப்புக் கொடிகளை உயர்த்தியதுடன், தெருவெங்கும் எதிர்ப்பு சுலோகங்களையெழுதிவைத்திருந்தார்கள். ஊரெங்கும் காணப்பட்ட

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# எங்கோ நடந்தால் ஆதரவு இங்கே நடப்பதற்கு...?

## பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை பாராட்டும் அம்மையார் உள்நாட்டு விடுதலை இயக்கத்தை உதாசீனம் செய்வதா?

**1948 ம் ஆண்டு பலஸ்தீனத்தை இரு கூறுகளாக்கி உருவாக்கிய இஸ்ரேலின் உதயத்தின் பின்பு உதித்தெழுந்த விடுதலை இயக்கம்தான், இன்று மத்தியகிழக்கு நாடுகளின் அரசியல் அத்திவாரத்தையே அசைத்துக்கொண்டிருக்கும் பலஸ்தீன விடுதலை முன்னணியாகும். "யூதர்களின் தாயகத்தை அழித்தொழித்து, மீண்டும் அதிலே உங்களைக் குடியேற்றுவோம்" என்ற அரபுகளின் ஆசைவார்த்தைகளிலே மயங்கி, பிறந்த மண்ணைத்துறந்து, வேற்றுமண்ணில் அகதிகளாக குடியேறிய இந்த அரசியல் அனுதைகளின் பலம் வாய்ந்த இயக்கம்தான் இன்றைய பலஸ்தீன விடுதலை முன்னணி.**

தன்னந்தனியாக நின்று போராடும் சின்னஞ்சிறு இஸ்ரேலின் சக்திக்கு முன் அடிபணிந்து நிற்கும் அரபுகளால் தம் இலட்சியம் நிறைவேறாது எனவுணர்ந்த பாலஸ்தீனர்கள் 'தம்கையே தமக்குதவி' என்ற தாரக மந்திரத்துக்கொப்ப ஆயுதம் ஏந்திப்போராடத் துணிந்தனர். அகதிகள் என்ற அவல நிலையை அடியோடு ஒழித்துக்கட்ட உறுதிபூண்டனர். இருபதுக்கு மேற்பட்ட அரபு நாடுகள் இருந்தும் தம் இழிநிலை போக்க அவர்களால் முடியவில்லையே என்ற மான உணர்ச்சி ஒர்புறம்! அண்டிவந்த இடத்திலே ஆட்சியாளர்கள் நீட்டிய துப்பாக்கிகள் கக்கிய வெம்மையைத் தாங்கச் சக்தியற்று தத்தளித்துத் தடுமாறும் நிலை இன்னோர்புறம்! இருபத்தைந்து வருடங்களாக, எந்த அரபுகளைத் தம் சொந்தச் சகோதரர்களாகக் கருதினார்களோ, அதே அரபுகளின் கரங்களால், தகிக்கும் பாலைவன மணலிலே, கூடாரங்களின் நிழலிலே, அகதிகள் என்ற முத்திரை பொறிக்கப்பட்டு, குடியேற்றப்பட்ட கொடுமை மற்றோர் புறம்! இத்தனை இன்னல்களுக்கும் தீர்வுகாண மறைந்து போன வரலாற்றுப் பெருமைகளுக்கு மறுமலர்ச்சிகாண, புதிய யுகம் ஒன்றை நாடி, புத்துணர்ச்சி தேடி, வீறு நடைபோடும் இவர்களின் எழுச்சி கண்டு வியக்காத நாடே இன்று எனலாம்.

அனல்கக்கும் துப்பாக்கி முனைகள் அணி அணியாக நெஞ்சினைப் பிளந்தாலும், திடம் கொண்ட அடலேறுகளை விடம்வைத்து மாய்த்தாலும், செங்களமாடி வரும் சிங்கங்களைச் சிறையிட்டு, சிரம் கொய்து, சிரித்து மகிழ்ந்தாலும், இழந்த தாயகமாம் பாலஸ்தீனத்தை எத்தனை தியாகம் செய்தேனும் மீட்டே தீருவோம் என்ற வெறியோடு, வேட்கையோடு — விடுதலைப்பயணம் என்ற பாதையிலே வெஞ்சமர் நாடி விரைந்துகொண்டிருக்கிறது இந்த விடுதலை விரும்பிகளின் கூட்டம்.

பட்ட இன்னல்களோபலப் பல! தொடர்ந்துவந்த துன்பங்கள் ஏராளம். நடந்துவிட்ட தூரத்தைப் பார்க்கினும், இன்னும் கடந்து செல்லவேண்டிய பாதையோ பயங்கரமானது. இஸ்ரேலிய எல்லைகளிலே எதிர்த்தாக்குதல் நடத்தச்சென்று இன்னுயிர் நீத்த வீரர்களின் பட்டியல் நீளமானது. 1970ம் ஆண்டு யோர்தானில் இடம்பெற்ற பலஸ்தீனக்கொலையெடுப்புக்குப் பலியானவர் பல்லாயிரமிருக்கும் எனப் பத்திரிகைச் செய்திகள் படம் போட்டுக் காட்டின. சிரிய ஆட்சியாளரின் அடக்குமுறை எதேச்சாதிகாரத்தால் செந்நீர் சிந்திய பலஸ்தீன அகதிகளின் சோக வரலாற்றின் சுவடுகள் மறையுமுன்னரே, லெபனானில் அவர்களுக்கெதிராகத் திட்டமிட்டுத் திருப்பிவிடப்பட்ட ஆயுதப் பலாத்காரம் பற்றிய சிந்தை நொந்துருகும் செய்திகள் செவிகளில் மோதிய வண்ணம் இருக்கின்றன.

1972ம் ஆண்டு மியூனிக் ஒலிம்பிக்விளையாட்டரங்கில் நிராயுதபாணிகளான பதினொரு இஸ்ரேலிய வீரர்கள் படுகொலையுண்ட செய்தியைத் தொடர்ந்து, பலஸ்தீனப் பிரச்சினையில் இனியும் அலட்சியமாக இருப்பது அழிவுக்கே வழிவகுக்கும் எனப்பல உலக நாடுகள் பகிரங்கமாகவே முறையிடத் தொடங்கின; அடுத்தடுத்துப் பல நாடுகள் பலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கீகரித்து, ஆதாரம் வழங்கின. முழுமூச்சுடன் தன் ஆதரவை வழங்குவதில் இலங்கையும் பின்னிற்கவில்லை. பலஸ்தீனர்களின் மேற்கொண்ட மட்டற்ற பற்றுதலைக் காட்டுதற்காக இலங்கை இன்னும் ஒருபடி மேலே சென்று இஸ்ரேலுடனான இராஜதந்திரத் தொடர்புகளைத் துண்டித்ததுடன், கொழும்பில் அவ்விடுதலை இயக்கத்துக்கென ஓர் கிளையும் தொடங்க அம்மையாரின் ஆட்சி அனுமதியளித்துள்ளது.

அடுத்த ஆகஸ்ட் மாதம் இலங்கையில் நடைபெறப்போகும் மண்டல சார்பற்ற நாடுகளின் உச்சி மாநாட்டிலும் ஒரு நாட்டுக்குரிய பூரண அந்தஸ்தோடு பலஸ்தீன விடுதலை முன்னணி அனுமதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் பலஸ்தீன விடுதலை வீரர்களுக்குப் பாராட்டுதல் தெரிவிக்கும் திருமதி. சிறிமாவோ அம்மையார் அவர்கள், அதே கொள்கைகளை அடிப்படையாக வைத்து அகிம்சைவழியில் இங்கு போராட்டம் நடத்தும் ஈழம்வாழ் தமிழர்களின் எழுச்சிகளை ஆயுதபலம் கொண்டு அடக்க முனைவது பெரும் விசித்திரமாகவே தோன்றுகிறது. அவர்கள் போராடினால் அது விடுதலை இயக்கம்! தமிழர்கள் போராடினால் அது பிரிவினை இயக்கம்! பாஸ்தீனர்களின் நடவடிக்கைகளுக்கு அங்கீகரிப்பு! பைந்தமிழர் நடவடிக்கைகளுக்குக் கதவடைப்பு! ஆசிய—ஆபிரிக்க—பலஸ்தீன் விடுதலை இயக்கங்கள் ஆயுதமேந்திப் போராட அறைகூவல்விடுக்கும் அதே வேளையில் சுதந்திரம் வேண்டி கிளர்ச்சி நடத்தும் தமிழர் தம் உரிமைகளை காலடியில் போட்டு நசுக்கி மகிழும் காட்சி இங்கு நடைபெறுகிறது. பலஸ்தீனத்தில் போராட்டம் நடத்தினால் தியாகிகள்; பைந்தமிழர் பூமியில் போராட்டம் நடத்தினால் பச்சைத் துரோகிகள்! பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நிலைகண்டு உலக நாடுகள் வழங்கிய மட்டற்ற ஆதரவின் மூலமாக 1974ம் ஆண்டு ஐ. நா. சபையில் எப்படி யாசீர் அரபாத்தின் குரல் அவர்களின் ஒடுக்கப்பட்ட உரிமைகளுக்காக முழங்கியதோ, அதே போன்று வெகு விரைவில் ஈழத் தமிழர்களின் குரலும், உலக மன்றத்தில் எதிரொலிக்கும் என்பதற்கையமில்லை;

— எஸ் பெனடிக்ற்

## வாரமொருமுறை பால் விநியோகம்

6-6-76ம் திகதி திருக்கோவில் திரு. சோ. மார்க்கண்டேயர் இல்லத்தில் தலைவர் திரு. க. சிந்தாத்துரை அவர்கள் தலைமையில் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் உட்பட 50க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் சமீபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றனர்.

திருக்கோயில் அரசினர் வைத்தியசாலையில் வாரம் ஒருமுறை கர்ப்பிணிகளுக்கு வைத்திய சோதனை நடைபெறும் தினத்தில் இவர்களுக்கு மாட்டுக்காரர்களின் உதவியுடன் பால் விநியோகம்செய்வதென்றும், இதைச் செயல்படுத்துவதற்காக திரு. சோ. மார்க்கண்டன், திரு தம்பிராசா, தட்சணாமூர்த்தி, இளையதம்பி ஆகியோரைக்கொண்ட குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள கிராமம் அனைத்திலும் கூட்டணிக் கிளைகளை அமைத்து செயல்படுத்துவதற்கு தலைவர் திரு. க. சிந்தாத்துரை, சி. வை. அரசரெத்தினம், த. தருமரெத்தினம், அ. பிரகஸ்பதி, சோ. தவராசா, சு. குருநாதபிள்ளை ஆகியோர் கொண்ட குழு தெரிவு செய்யப்பட்டது

இன்னும் பல விடயங்கள் விவாதிக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது.

## கருத்தரங்கில்

23-6-76ல் கொழும்பில் தந்தை செல்வாவின் இல்லத்தில் கொழும்புக்கிளைத் தலைவர் திரு ஈழவேந்தன் தலைமையில் நடைபெறும் வாராந்த கருத்தரங்கில் த. வி. கூ. செயலதிபர்களில் ஒருவரான திரு, மு. சிவசிதம்பரம் அவர்கள் "தொடர்ந்து என்ன?" என்ற தலைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகள் பற்றி கருத்து விளக்கம் கொடுப்பார்.

## முத்தமிழ் விழா

புகையிரதத் திணைக்கள முத்தமிழ் மன்றம் எடுக்கும் முத்தமிழ் விழா 26-6-76 சனிக்கிழமைவெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் இடம்பெறும்.

விழாவின் காலை நிகழ்ச்சிகளாக கவியரங்கம், பட்டி மன்றம் ஆகிய நிகழ்ச்சிகளும் மாலை நிகழ்ச்சிகளாக 'உதயம்' மலர் வெளியீடு, பரத நாட்டியம் பரிசில் வழங்கல், நாடகங்கள் முதலியன இடம்பெறும்.

"கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில் அருட்திரு சா. ம செல்வரெத்தினம் அடிகளார் 'தமிழன் அன்றும் இன்றும்' என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்துவார்.

## விஸ்வமடு த, வி. கூ, கிளையின் ஆண்டு பொதுக்கூட்டம்

விஸ்வமடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 24-6-76 புதன்கிழமை மாலை 5 மணிக்கு விஸ்வமடு புளியடிச் சந்திக்கு அருகாமையில் நடைபெற உள்ளது:

வவுனியா பா.உ, திரு, சே, மா. செல்லத்தம்பு கிளிநொச்சி பா. உ. திரு. வீ. ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார்கள்;

கூட்டத்துக்கு திரு. இராசு காரத்திகேசு தலைமை தாங்குவார். செயலாளர் அறிக்கை, பொருளாளர் அறிக்கை, புதிய செயற்குழுத் தெரிவு ஆகியனவும் இடம்பெறும்.

## செய் அல்லது செத்து மடி!

நான் சுருக்கமாக ஒரு மந்திரத்தை உங்களுக்குக் கூறுகிறேன். அந்த மந்திரத்தை உங்கள் இதயங்களில் பொறித்துவைத்துக்கொள்ளுங்கள். உங்கள் ஒவ்வொருவருடைய மூச்சிலும் அந்த மந்திரம் ஒலிக்கவேண்டும். 'செய் அல்லது செத்துமடி' என்பதே அந்த மந்திரமாகும். ஒன்று நாடு விடுதலை பெறும்படி நாம் செய்யவேண்டும் அல்லது அம்முயற்சியில் நாம் உயிரைக் கொடுக்கவேண்டும். நமது அடிமைத்தனம் நீடிப்பதை பார்த்துக்கொண்டு நாம் உயிர்வாழமாட்டோம். உங்களுடைய மனச்சாட்சியையும், கடவுளையும் சாட்சியாக வைத்துக்கொண்டு ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளுங்கள். விடுதலை கிடைக்கும்வரை ஓய்வு எடுத்துக்கொள்ளப் போவதில்லை என்பதும், சுதந்திரத்தை அடைய உயிரையும் கொடுக்கச் சித்தமாக இருக்கிறோம் என்பதுமே அந்தப் பிரதிக்ஞையாகும். உயிரை இழப்பவனே உண்மையில் உயிரைப் பெறுகிறான். உயிரைப் பாதுகாக்க முயற்சிப்பவன் உயிரை இழக்கின்றான். கோழை உள்ளம் படைத்தவனுக்கு சுதந்திரமில்லை.

—மகாத்மா காந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில ஆட்சியில் அண்ணல் காந்தியின் அஹிம்சைப் போராட்டம்!

## சட்டமறுப்பும் சர்க்காரின் கெடுபிடியும்

ஈழம் வாழ் தமிழன் ஒவ்வொருவரினும் மனதில் இன்று எழுந்துள்ள கேள்வி, எம் தலைவர்களுக்கு என்ன நடக்கும் என்பதே. அடுத்து அடுத்து அரசு எடுக்கும் நடவடிக்கைகள் தமிழர்களுக்கு ஆத்திரமூட்டுபவைகளாகவே அமைந்திருக்கின்றன.

நாம் கைக்கொண்டிருப்பது ஆயுதப்போரல்ல அண்ணல் காந்தியின் அடியை ஒற்றிய அகிம்சைப்போர். சட்டமறுப்பில் ஈடுபட்டனர் என்பதற்காக எம் தலைவர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர்—இந்த நிலையிலே அகிம்சையின் மகிமையை அவனிக்கு எடுத்தியம்பிய காந்தியடிகள் மேற்கொண்ட சட்டமறுப்பையும் அன்றைய ஆங்கில ஏகாதிபத்தியம் நடந்து கொண்டமுறைபற்றியும் நாம் சற்று ஆராய்தல் நன்றே.

போரும்— பஞ்சமும், பசியும் பிணியும் பாரதத்தை அன்று ஆட்கொண்டிருந்த காலம். பர்மா, மலாயாவில் இருந்து அழிந்தவர்கள் போக மீதிப்பேர் உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு தாய்நாட்டில் தஞ்சம் புகுந்தனர். இந்தியாவின் இந்நிலை கண்டும் இரங்காத ஆங்கில ஆட்சி — இன்னல் படுவோரின் இடர் களையாதுபோரையிட்டே சிந்தித்துக்கொண்டிருந்தது—

இந்நிலையில் பாரத மக்களின் பரிதாபகரமான நிலை மாற்றியமைக்கப்படவேண்டுமாயின் அதற்கு உரிய ஒரே வழி சுதந்திர இந்தியா அமைப்பதே—என்று காங்கிரஸ் கமிட்டி 1942 ஜுலை 14ம் திகதி வார்த்தாவில் தீர்மானமெடுத்தது. அதை ஆகஸ்ட்டில் பம்பாயில் அகிலஇந்திய தேசியக் காங்கிரசும் ஏற்றுக்கொண்டது.

'வெள்ளையனே வெளியேறு'' ''நாட்டை விட்டுப் போங்க''—பூரண சுதந்திரம் உடனடியாக வேண்டும். இல்லையேல் சட்டமறுப்பின் மூலம் சாத்வீகப் போராட்டம் நடத்துவது எனக் கோருவதாயிற்று ஆனல்—

மறுநாள் விடிந்ததும், மக்களுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. காந்திஜி உட்பட காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்கள் அனைவருமே கைது செய்யப்பட்டனர், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். ஆத்திரம் எல்லை மீறியது அசம்பாவிதங்கள் ஏற்பட்டன—இரத்த ஆறு ஓடியது—பிணங்கள் வீழ்ந்தன.

இத்தனைக்கும் சட்டமறுப்புச் செய்தனர் என்பதற்காக அல்ல செய்யத் தீர்மானித்தனர் என்பதற்காகவே இந்த நிலை. குற்றமே செய்யாத தலைவர்களைக் கைது செய்ததன் மூலம் குழப்பத்திற்கு வித்திட்ட ஆட்சியாளர் — ஏற்பட்ட இரத்தக்களரிக்கு காந்தி அடிகளே காரணம் என்று குற்றம் சாட்டினர்—

முடிந்தால் ஆதாரத்துடன் நிரூபியுங்கள் என்றார்—அரசு மௌனம் சாதித்தது. —ஆயினும் தன்னைத் தானே பரிசோதனைக்குள்ளாக்க நினைத்த காந்தியடிகள் 10-2-43 தொடக்கம் 21 நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்:

இச்செயல் காட்டுத் தீ போல் நாட்டில் எங்கும் பரவியது—தம் அபிமானத்திற்குரிய தேசபிதாவிற்கு ஏதும் நடந்து விடக்கூடாது என்பதற்காக மக்கள் மன்றாடினர்—மனமுருகி அழுதனர்:

எல்லாத்திக்குகளிலும் இருந்து எழுந்த எதிர்ப்புக் கோஷங்களாய் பத்திரிகைகள் கண்டித்து அறிக்கைவிட்டன, வங்காள சட்டசபை, மத்திய சட்டசபை, இலங்கை சட்டசபை ஆகியன விடுதலைத் தீர்மானங்களை அனுப்பிவைத்தன. வைஸ்ராயின் சட்டசபை உறுப்பினர்கள் மூவர் இதனை ஆட்சேபித்து தமது பதவிகளை இராஜிநாமாச்செய்தனர். அமெரிக்கா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து விடுதலை செய்யும்படி கோரிக்கைகள் எழுந்தன. ஆனல் — ஆங்கிலேயவெறியாட்சி அதற்கும் மௌனமே சாதித்தது.

தெய்வாதீனமாக காந்தியடிகளின் 21நாள் உண்ணாவிரதம் முடிவடைந்தது. உயிர்பிழைத்தார் என்று உலகம் மகிழ்ந்தது.

காந்தியடிகள் மீண்டும் குரல் எழுப்பினர் — உங்களுக்கு சான்றுகள் உண்டு என்றால் நீதிமன்றத்தில் விசாரணை செய்யுங்கள் என்று மீண்டும் கண்டனங்கள் கிளம்பின — எனவே அப்போது வைசிராயாய் இருந்த லின் லித்தோ பிரபு டாட்டன் ஹாம் என்பவரின் மூலம் ஒரு அறிக்கை தயாரித்து வெளியிட்டார். அதில் காங்கிரசுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

(1) காங்கிரஸ் பலாத்காரச் செயல்களுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தது.

(2) தேசிய சர்க்கார் அமைத்து ஆதிக்கம் செய்ய ஆசைப்பட்டது.

(3) ஜப்பானுடன் சமரசம் செய்துகொள்ளத் தயாராக இருந்தது.

காங்கிரஸ் பலாத்காரச் செயல்களுக்கு தூண்டவில்லையென்றும் —ஜப்பானை ஆதரிக்கவில்லை மாறாக ஜப்பான் சீனவுடன் போர் தொடங்கியதுமே ஜப்பானியப் பொருட்களைப் பகிஷ்கரித்தவர்கள் காங்கிரஸ் தான். ஆனல் ஆட்சியாளரே ஜப்பானின் வேண்டுகோளுக்கு இணங்கி பர்மா மூலம் சீனவிற்கு தளபாடங்கள் போவதைத் தடைசெய்யும் முகமாக பர்மா பாதையை மூடியது—இன்று பிலிப்பைன்ஸ் தீவுகளை ஜப்பான் தாக்கத் தொடங்கியதன் பின்னரே ஆட்சியாளர் அதிருப்தியடைந்துள்ளனர் என்றும் ஜப்பானியர்க்கு நாம் எதிரிகளே ஏனெனில் ஜப்பான் வெற்றியீட்டினல் ஆங்கிலேயரைவிட நாட்டையிழப்பவர்கள் நாங்களே'' என்று ஆதாரங்களுடன் விளக்கினர்.

எனவே ஆட்சியாளர் வெள்ளையறிக்கை ஒன்றை வெளியிட்டபோது மூன்றுவது குற்றச்சாட்டை நழுவவிட்டனர்:

இறுதியில் இக்குற்றச்சாட்டுள் இரண்டும் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டன — பாரபட்சமற்ற நீதிபதிகள் அமர்த்தப்படவேண்டும் என காந்தியடிகள்வேண்டுகோள் விடுத்திருந்தார் எனினும் அமர்த்தப்பட்ட நீதிபதிகள் ஆங்கிலேயருக்குச் சார்பானவர்களே—

ஆனல், நீதிபதிகளின் தீர்ப்பு காங்கிரசாருக்கு சாதகமாக அமைந்திருந்தது.—

டில்லி ஜில்லா மாஜிஸ்ரேட் தனது தீர்ப்பில்—"அட்டூழியங்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி அனுமதித்த காரியத்திட்டத்தில் சேர்ந்தவை என்பதற்குச் சான்றுகள் தரப்படவில்லை'' என்றும்......

வர்தா ஜில்லா ஜட்ஜ் தனது தீர்ப்பில் காங்கிரஸ் சட்டமறுப்பு ஆரம்பிக்குமாறு தீர்மானம் செய்ததாகவோ, அல்லது சட்டமறுப்பு ஆரம்பிக்குமாறு ஜனங்களுக்கு இரகசிய அறிவிப்புவிடுத்ததாகவோ நிரூபிக்கப்படவில்லை. யாரோ சில காங்கிரஸ்காரர்கள் அட்டூழியங்களில் கலந்துகொண்டதைக் கொண்டு சட்டமறுப்பியக்கம் நடப்பதாகவும் அதைக் காங்கிரஸ் நடப்பிப்பதாகவும் தீர்மானிப்பது நியாயமாகாது'' எனவும் தீர்மானித்தனர்.

தீர்ப்பு இப்படி இருந்தாலும் காந்தியடிகளோ தொண்டர்களோ விடுதலை செய்யப்படவில்லை அப்போதைய வைசிராய் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த விசேட அதிகாரங்களைக் கொண்டு சட்டங்களை மாற்றிய

—4-ம் பக்கம் பார்க்க

# தீண்டாமை எம்மிடையே தீர்ந்துவரும் பிரச்சினை

## அமைச்சரின் ஒப்பாரி அர்த்தமற்றது!

ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு, இதை தொன்றுதொட்டுத் தமிழர்கள் இன்றுவரை கூறிவருகின்றார்கள்.

இங்குள்ள தமிழர் ஒன்றானர் என்று கவிஞர்களின் பாடல்களையும் அடிக்கடி மேடைகளிலும் எழுத்துகளிலும் கூறிவருகின்றோம்

அன்று தமிழர்களிடையே மிகமோசமாக இருந்து வந்த சாதிப்பிரச்சினையானது இன்று பெரும்பாலும் அழிந்துகொண்டு வந்துவிட்டதுதான் என்றாலும், வேரோடு பிடுங்கி எறியப்பட்டுவிடவில்லை என்பதை யாரும் மறுத்து விடுவதற்கில்லை.

இதையே ஒரு காரணமாகவைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் இன்றைய இலட்சியத்திற்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் உடன்பிறந்த வியாதிகள் போன்ற சில தமிழர்களும், தாங்களே தலைவர்கள் என்று தமக்குத்தாமே பட்டம் சூட்டிக்கொண்டவர்களும், சாதிப்பிரச்சினையை வைத்துக்கொண்டே வயிறுவளர்க்கத்திரியும் சிலரும் மலிந்திருக்கும் இவ்வேளையிலே—

அண்மையிலே அருந்ததியர் (ஹரிஜன) சங்கத்தின் 44வது ஆண்டு விழாவில் கலந்துகொண்ட பொது நிருவாக, உள்நாட்டு வர்த்தக அமைச்சர். திரு ரி. பி. இலங்கரத்தின அவர்கள் ஹரிஜனர் என்று சொல்லப்படும் தமிழர்களுக்காக அழுது வடித்திருப்பது ஆச்சரியத்துக்குரியதாகவும், அவரின் அறியாமை குறித்துப் பரிதாபப்படவேண்டியதாகவும் இருக்கின்றது.

அழுதுவடிக்கும் அமைச்சர் ஆறுதல் பெறவேண்டும் என்பதற்காக ஒருசில வார்த்தைகளை அவருக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

அமைச்சர் அவர்களே, தமிழர்களில் ஒரு பகுதியினரைச் சிறுபான்மை இனத்தவர்களாகப் பிரகடனம் செய்துகொண்டு, அவர்களுக்கு என்று ஒரு தனித் தொகுதிவேண்டும், தனிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று உங்களைச் சார்ந்தவர்களே ஒப்பாரிவைக்கின்றனரே ஒழிய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அல்ல.

பிச்சையெடுப்பவன் தன் உடலில் உள்ள ஊனத்தை மற்றவர்களுக்கு வெளியரங்கமாகக் காட்டிக்கொண்டு பிச்சையெடுப்பது போன்றதே அவர்களின் நடவடிக்கை.

அவர்களைப் பொறுத்தவரையில் சிறுபான்மைத் தமிழர்கள் என்று ஒரு தனியினம் தனித்து நிரந்தரமாக வாழவேண்டும் என்று விரும்புபவர்கள்—

எமது கொள்கை [illegible] இனம் இருக்கக் [illegible] எல்லாரும் தமிழர் என்ற நிலை உருவாகவேண்டும் என்பதுதான்—

அதன் காரணமே எமது தலைவர்கள் சமர்ப்பித்த ஆறு அம்சக்கோரிக்கையில் கூட சாதிப் பிரச்சினை முற்றாக ஒழிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்துள்ளனர்.

அந்தக்கோரிக்கையைக் கூட ஏற்க மறுத்த நீங்கள் எம் சகோதரர்களிடையே மடிந்துகொண்டுவரும் இப்பிரச்சினையையிட்டு தங்கள் மாரடிக்கும்பெண்கள் போல குரல் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை;

வட்டுக்கோட்டை மாநாட்டில்கூட இரண்டு மாதங்களை தீண்டாமை ஒழிப்பு மாதங்களாகப் பிரகடனம் செய்துள்ளனர் தமிழர் விடுதலைக் கூட்டணியினர்,

சாதி ஒழிப்பிற்காக எமது தலைவர்களும் எடுத்துவரும் முயற்சிகளைப்பற்றி உண்மைத் தமிழர்கள் அறிவார்கள்—

எம் தலைவர்கள் நடத்திய சமபந்திப் போசனங்கள் எமது பிரமுகர்களின் குடும்பங்களிடையே நடைபெறும், பெறவிருக்கின்ற கலப்புத்திருமணங்கள் — ஆலயப் பிரவேசங்கள்—

இவைபோக ஹரிஜனர் எனப்படும் மக்களுக்காக—அவர்கள் சார்பாக எமது தமிழ்த் தலைவர்களான சட்டத்தரணிகளே வழக்குகளில் வதாடியிருக்கின்றார்கள்!

இவைபோக எமது இன்றைய இலட்சியம் கைகூடுமானல்—சாதிப்பிரச்சினையை ஒரு தேச விரோதக் குற்றமாகவே பிரகடனப் படுத்தவும், எமது அரசியல் அமைப்பில் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவும் தீர்மானித்துள்ளார்கள் என்பது தாங்கள் அறியாதது அல்ல—

எனவேதான் "தமிழ்த் தீவிரவாதிகள் விரும்புவது போல் வடக்குகிழக்குப் பகுதிகளில் தமிழ் ராஜ்யம் ஒன்று ஏற்பட்டால் ஹரிஜன மக்கள் அங்கு கோயில்களில் நுழைய முடியாத நிலை ஏற்படும். பொதுக்கிணறுகளில் நீர் அருந்தக்கூட முடியாமல் போகும்'' என்ற போலிவார்த்தைகள் எமக்குத் தேவையில்லை — இவற்றைக்கேட்டு தமிழ் மக்கள் ஏமாறும் நிலையிலும் இல்லை இது எங்கள் பிரச்சினை, எங்கள் குடும்பப் பிரச்சினை—எங்கள் உள்வீட்டுப் பிரச்சனை—நாம் ஒரு தேசிய இனம் —நீங்கள் ஒரு தேசிய இனம்—நீங்கள் எங்களுக்கு அந்நியர்கள் எனவேதான் —

ஆயிரம் இங்குண்டு சாதி — இதில்
அந்நியர்வந்து புகல் என்ன நீதி

என்று கேட்க விரும்புகிறோம்.

— அற்லஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலயத்தில் செய்திப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

சுதந்திரன்
SUTANTIRAN

### ஆங்கில ஆட்சியில்...

—1-ம் பக்கத் தொடர்

மைத்து அவர்களை விடுதலை செய்து கைதிகளாவே வைத்திருந்தார்.

1942 டிசம்பர் 31ல் இது சம்பந்தமாக கைதாகி தண்டனை பெற்ற கைதிகள் 14000 மும் பாதுகாப்புக் கைதிகள் 11000பேருமாவர்.

இடையிடையே விடுதலையானவர்கள் போக மொத்தம் 9000 பேர் கைதிகளாக இருந்திருக்கின்றனர்.

இந்த நிலையிலே சிறையிலேயே அன்னை கஸ்தூரிபாய் 1944ல் பெப்பிர வரியில் காலமானார் — தொடர்ந்து ஏப்பிரல் மாதம் காந்தியடிகள் சுகவீனம் கொண்டிருந்த காரணத்தால் அன்னை கஸ்தூரி பாயுக்கு ஏற்பட்ட நிலை காந்தி அடிகளுக்கும் ஏற்படவிடக்கூடாதே என்று —கண்டனங்களுக்கு அஞ்சிய ஆட்சி 1944-மே 5ம் நாள் காந்தியடிகளை விடுதலை செய்தது.

### பண்டத்தரிப்பில்...

—7-ம் பக்கத் தொடர்

யொன்றில் அடிக்கடி இந்தச் சேட்டை நடக்கிறதாம். ஜே. பி. பட்டத்துக்கு ஆசைப்பட்ட கிலரது தூண்டுதலுக்கே பொலிசார் இவ்வாறு ஆடிவருவதாக இப் பகுதி மக்கள் பேசிக்கொண்டிருக்கின்றனர்.

### இராசன் பேசிய கூட்...

—1-ம் பக்கத்தொடர்

எதிர்ப்பு சுலோகங்களை அழிப்பதிலும் நிறைந்து பறந்த கறுப்புக்கொடிகளை அவிழ்ப்பதிலும் பொலிசார் படாதபாடுபட்டனர்.

குறித்த தினத்தில் ஒருசில கையாட்கள் நடைபாவாடை விரிக்க ஊர்வலம் வந்த ராஜனுக்கு காணுமிடமெங்கணும் நீக்கமற நிறைந்து காணப்பட்ட எதிர்ப்புக்கோலம் திகில் ஊட்டியது. பெருந்திரளான காக்கிச் சபையினர் சகிதம் திரு. இராசன் அங்கு வந்தார்.

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திடீரென பரபரப்புஏற்பட்டது. ராஜனுக்காக போடப்பட்டிருந்த வரவேற்பு வளைவு ஒன்று திடீரென திப்பற்றிக் கொண்டு எரிந்து சாம்பலாகியது இதனல் மேலும் அதிர்ச்சியடைந்த இராசன், தப்பினோம் பிழைத்தோம் என்று கூட்டத்தை முடித்துக்கொண்டு கித்தாண்டியைவிட்டு ஓட்டம் எடுத்தாராம்;



நீதிமன்றத்தைவிட்டு வெளியே வந்த தலைவர்களை சட்டக்கல்லூரி தமிழ் மாணவ மாணவிகள் ஊர்வலமாக சட்டக்கல்லூரிக்கு அழைத்துப் செல்வதையும், சட்டக் கல்லூரி மாணவர்கள் அளித்த வரவேற்பில் தந்தை செல்வாவும் ஏனைய தலைவர்களும் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

## சத்தியத்திற்காகவாதிடும் சட்டத்தரணிகள்

1. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கியூ. சி.
2. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் கியூ. சி.
3. திரு. எம். திருச்செல்வம் கியூ. சி.
4. திரு. ஆர். ஆர். குறசட் தம்பையா கியூ. சி.
5. திரு. பி. வரெட்ணராஜா கியூ. சி.
6. எஸ். ஜே. கதிர்காமர் கியூ. சி.
7. திரு. ஆர். பாலசுப்பிரமணியம்
8. திரு. ஏ. எம். சரவணமுத்து
9. திரு. ஏ. சி. நடராசா
10. திரு. ஏ. சம்பந்தன்
11. திரு. என். சிவஞானசுந்தரம்
12. திரு. எஸ். தம்பித்துரை
13. திரு. என். பி. எம். ராஜேந்திரன்
14. திரு. ஜே. பி. செருபிம்
15. திரு. வி. அருளம்பலம்
16. திரு. ஜே. என். டி. டேவிட்
17. திரு. இ. செல்லப்பா
18. திரு. வி. எஸ். புள்ளநாயகம்
19. திரு. கே. ஜெயக்கொடி
20. திரு. எம். சிவசிதம்பரம்
21. திரு. ஏ. மகேந்திரராஜா
22. திரு. ஜி. எப். சேதுகாவலர்
23. திரு. எம். எஸ். கனகரெத்தினம்
24. திரு. எஸ். அம்பலவாணர்
25. திரு. எஸ். கதிரவேற்பிள்ளை
26. திரு. ஆர். மாணிக்கவாசகர்
27. திரு. சிவராஜரத்தினம்
28. திரு. மகேஸ் கனக சுந்தரம்
29. திரு. கே. சண்முகலிங்கம்
30. திரு. எஸ். சி. குறசெட் தம்பையா
31. திரு. பி. நாகேந்திரா
32. திரு. எச். டி. தம்பையா
33. திரு. ஜே. ஏ. வேல்சிகம்
34. திரு. இ. பத்மநாதன்
35. திரு. லெஸ்லி பாட்லேட்
36. திரு. ஆர். ஆர். நல்லையா
37. திரு. ஜே. ஜே. முத்தையா
38. திரு. கே. தேவராஜா
39. திரு. எம். அமரசிங்கம்
40. திரு. கே. நடராஜா
41. திரு. கே. கந்தசாமி
42. திரு. எஸ். சிற்றம்பலம்
43. திரு. எஸ். விஜயநாதன்
44. திரு. சி. கணேஷ்
45. திரு. வீ. க செல்வராஜா
46. திரு. எல். ஏ. ரி. வில்லியம்ஸ்
47. திரு. சி. மோதிலால் நேரு
48. திரு. எஸ். சி. சந்திரஹாசன்
49. திரு. கே. கனக ஈஸ்வரன்
50. திரு. எஸ். பரமேஸ்வரன்
51. திரு. டாக்டர் நீலன் திருச்செல்வம்
52. திரு. ஜூனியர் ஜீ.ஜீ. பொன்னம்பலம்
53. திரு. எஸ். ருத்திரமூர்த்தி
54. திரு. பி. காராளசிங்கம்
55. திரு எஸ். மகேந்திரன்
56. திரு. ஜி. குமாரலிங்கம்
67. திரு. எம். சிவராஜலிங்கம்
68. திரு. ஏ. சின்னையா
59. திரு. எம். எம். பாயிஸ்
60. திரு. எஸ். சிவகுமாரன்
61. திரு. ரி. சோமசுந்தரம்
62. திரு. வி. ஆனந்தசங்கரி
63. திரு. என். மகேந்திரராஜா
64. திரு. என். லோகேஸ்வரன்
65. செல்வி கே. புறாடி.
66. திரு. கணேஷ் ஆனந்தன்
67. சே. ஜெயகிருஷ்ணன்.

ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கைது செய்யப்பட்ட நான்கு தலைவர்களின் சார்பிலும் சட்டத்தரணிகளாக ஆஜராகியுள்ளனர்.

### புஷ்பராணியை...

—1-ம் பக்கத் தொடர்

யத்தில் சரணடைந்தார். சரணடைந்த புஷ்பராணியையும், கல்யாணி என்ற பெண்ணையும் பொலிசார் கடூரமாகத் தாக்கியுள்ளனர். ஆண்பொலிசார் புஷ்பராணியின் உடைகளைத் தாமே வலியக் களைந்து நிர்வாணமாக நிற்கச்செய்துள்ளனர். ஒரு பெண்பொலிஸ் கூட அச்சமயத்தில் அங்கு இருக்கவில்லை, புஸ்பராணி தாயும் தகப்பனும் சகோதரனும் நிற்கும்போது அவர்கள் கண் எதிரிலேயே புஷ்பராணியை நிர்வாணமாக்கியுள்ளனர், இவ்விருபெண்களையும் பொலிசார் துன்புறுத்தியுள்ளனர் இவர்களுக்கு காயமும் ஏற்பட்டுள்ளது.

"இந்த ஈனத்தனமான நடவடிக்கை குறித்து பூரண விசாரணை நடத்தவேண்டும்!"

சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் உலகில் நாகரீகமுடைய வேறு எந்த ஒரு நாட்டிலும் இளம்பெண்கள் இவ்வாறு மனிதாபிமான மற்ற மோசமான முறையில் நடத்தப்பட்டதில்லை; இங்கு தான் இது நடைபெற்றுள்ளது. பொலிசார் தமது புகழ்பெற்ற நாலாவதுமாடியை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கிங்ஸ் ஹவுசிற்கு இப்போது மாற்றியுள்ளனர். இந்த அநியாயம் பற்றி உடன் விசாரணை நடத்தவேண்டும் என்று வற்புறுத்தினர்.

### நவம் நடவடிக்கை

இது இப்படியிருக்க, சிறையிலிருக்கும் புஷ்பராணியையும் ஏனையபெண்களையும் ஒரு பெண் டாக்டர் சகிதம் சென்று பார்ப்பதற்கு தமக்கு அனுமதி வழங்குமாறு யாழ் பொலிஸ் அதிபரிடம் திரு. வி. என். நவரத்தினம் கோரியுள்ளார். இது குறித்து டி. ஐ. ஜியின் அனுமதி பெற்று பதில் கூறுவதாக பொலிஸ் அதிபர் திரு நவரத்தினத்துக்கு எழுதியுள்ளார்.

மில்க்வைற் சோப் தயாரிப்பாளர்களின் ஆதரவில் கமலாலயம் கலைக்கழகம் அளிக்கும்

தடிச் சாமியார்
(வானொலி தொடர் நாடகம்)

4 - 7 - 1976 முதல் பிரதி ஞாயிறுதோறும் பிற்பகல் 3-30 மணிக்கு வானொலியில் கேட்டு மகிழலாம்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்

### தூக்குமேடை.....

(1-ம் பக்கத் தொடர்)

உணர்ச்சிபொங்க உரை நிகழ்த்திய சட்டக்கல்லூரி மாணவி செல்வி தேவரஞ்சினி யோகநாதன் "பாரதிதாசனின் பாடலுக்கு அமைய, பைந்தமிழ் மக்களின் ஜீவமரணப் போராட்டத்தில் பொதுவாக, மகளிரும் குறிப்பாக சட்ட மாணவிகளும் குதிப்பதற்குத் தயார்" எனக் குறிப்பிட்டார்.

சட்டக்கல்லூரித் தமிழ் மன்றச் செயலாளர் க. வசந்தசேனன் நன்றியுரை கூறினர். தொடர்ந்து தலைவர்களுக்கு மாணவர்கள் குளிர்பான விருந்தளித்து மகிழ்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டடாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜூன் மாதம் 23-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.